பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 03 2026 SATURDAY 6 45 AM

தலைப்புச் செய்திகள்

1. எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதும், பொதுமக்களின் நலன்களைப் பாதுகாப்பதும் அரசின் முன்னுரிமை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த நடைமுறை சுமுகமாக நடந்த முடிந்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக நிகழ்ந்த கொலை, கொள்ளை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து திமுக கூட்டணிக் கட்சிகள் மௌனம் சாதித்து வருவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.
4. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ள காங்கிரஸ் வேட்பாளர்கள் விரைவில் அறிவிக்கப்படுவார்கள் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.
5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. முதல் போட்டியில் பெங்களூரு அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

>>>>> <<<<<

எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதும், பொதுமக்களின் நலன்களைப் பாதுகாப்பதும் அரசின் முன்னுரிமை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மேற்காசியாவில் அண்மையில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக நாட்டிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து மாநில முதலமைச்சர்கள், யூனியன்பிரதேச துணைநிலை ஆளுநர்களுடன் பிரதமர் நேற்று காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

இதில் பேசிய அவர், தொழில்துறை மற்றும் விநியோக கட்டமைப்பை வலுப்படுத்த முன்னுரிமை அளிக்குமாறு மாநில அரசுகளை அவர் கேட்டுக்கொண்டார்.

தற்போதைய சூழல் மாறிக்கொண்டே இருப்பதால் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சகங்களுக்கு இடையேயான குழு செயல்பட்டு வருவதாகவும், இது அன்றாடம் நிலைமையை ஆய்வு செய்து சரியான நேரத்தில் உரிய முடிவுகளை எடுத்து வருவதாகவும் பிரதமர் கூறினார்.

>>>>> <<<<<

பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு இல்லாதமல் கிடைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலிய இயற்கை எரிவாயு, துறைமுகங்கள் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் அனைத்து எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெய் இருப்புடன் முழு திறனுடன் இயங்கி வருவதாக கூறினர்.

பெட்ரோல், டீசல் இருப்பு பராமரிக்கப்பட்டு வருவதாகவும், உள்நாட்டு நுகர்வைக் கருத்தில் கொண்டு சமையல் எரிவாயு உற்பத்தி 40 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

நாடு முழுவதும் வீட்டு உபயோகத்திற்காக குழாய் மூலம் வழங்கப்படும் எரிவாயுவிற்கு 100 சதவீதம் முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

உணவகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் சிற்றுண்டி சாலைகளுக்கும் எரிவாயு போதிய அளவில் கிடைப்பதை உறுதி செய்யுமாறு நகர எரிவாயு விநியோக நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்கு போன்ற வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற வலைதளங்களில் பரப்பப்படும் தவறான செய்திகள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>>> <<<<<

தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் வாக்களார் பட்டியல் தீவிர திருத்த நடைமுறை சுமுகமாக நடந்த முடிந்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று ஊடக நிறுவனம் நடத்திய உச்சிமாநாட்டில் பேசிய அவர், வாக்காளர் பட்டியலின் துல்லியத்தை உறுதி செய்வதே இந்த நடைமுறையின் நோக்கமாக இருந்தது என்று கூறினார்.

மேற்குவங்க மாநிலத்தில் இருந்து மட்டும் ஆட்சேபனைகள் அதிக அளவில் வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அசாம் மாநிலத்தில் போலியான ஆவணங்களின் அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட சிலர் நீக்கப்பட்டதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>> <<<<<

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக நிகழ்ந்த கொலை, கொள்ளை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து திமுக கூட்டணிக் கட்சிகள் மௌனம் சாதித்ததாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை புறநகர் ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் உள்ளிட்ட இடங்களில் நேற்று மாலை தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், சட்டமன்றத்திலும் அக்கட்சிகள் மக்கள் பிரச்சினைகளை பேசவில்லை என்று கூறினார்.

கூட்டணியில் உள்ள கட்சிகள் மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டதால் அவர்களுக்கு குறைவான தொகுதிகளையே திமுக ஒதுக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திமுக அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த தவறிவிட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

>>>>> <<<<<

தமிழகத்தில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 28 தொகுதிகளில் 23 தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளாகவும், மீதமுள்ள 5

தொகுதிகள் விரைவில் அடையாளம் காணப்படும் என்றும் அக்கட்சியின் மாநில தலைவர் திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தென்காசி மற்றும் விருத்தாச்சலம் தவிர 16 தொகுதிகள் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

காங்கிரஸ் கட்சி போட்டியிட விரும்பும் சில தொகுதிகளை கூட்டணிக் கட்சியினரும் கேட்பதால் ஓரிரு நாளில் இதற்குத் தீர்வு காணப்பட்டு வேட்பாளர் பட்டியல் வெயிடப்படும் என்றும் அவர் கூறினார்.

>>>>> <<<<<

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு நாமக்கல் மாவட்டத்தில் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நாமக்கல் மாவட்டம் பாச்சல் பகுதியில் மாணவர்கள், பேராசியர்கள் இணைந்து மனித வடிவில் தேர்தல் விழிப்புணர்வு சின்னங்களை உருவாக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>> <<<<<

கிறிஸ்தவர்களின் தவக் காலத்தை முன்னிட்டு உலகப்புகழ் பெற்ற வேளாங்கன்னி பேராலயத்தில் சிலுவைப் பாதை ஊர்வலம் நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>> <<<<<

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஏனைய தமிழகம் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை இன்று வழக்கத்தை விட சற்று அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் அதிகபட்ச வெப்பநிலை 33 முதல் 34 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 முதல் 25 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>> <<<<<

*இருவரிச் செய்திகள்*

உள்நாட்டுத் தேவை அதிகரித்துள்ளதால் வெளிநாடுகளில் எரிவாயு ஏற்றுமதிக்கு ரஷ்யா தடை விதித்துள்ளது.

---------

ஈரானில் தரைவழித் தாக்குதல் நடத்தாமலேயே அமெரிக்கா தனது இலக்கில் வெற்றி பெறும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

---

பிஹார் மாநிலத்தில் நேற்று வீசிய கடும் சூறாவளி காற்று காரணமாக பல இடங்களில் விளம்பர பதாகைகளும், பந்தல்களும் சரிந்து விழுந்தன.

------------------

தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி காஞ்சிபுரம், பெரம்பலூர், தஞ்சாவூர், தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

-------------------------

திருச்செந்தூரில் கரகாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட தமிழகத்தின் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளுடன் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

--------------------------

ராமநவமி திருவிழாவை முன்னிட்டு கடையநல்லூர் கிருஷ்ணாபுரம் ஆஞ்சநேயர் திருக்கோயிலில் நேற்று நடைபெற்ற சிறப்பு பூஜையில் ஏராளமானோர் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

-------------------------------

பங்குனி உற்சவத்தின் ஒரு பகுதியாக ஸ்ரீரங்கம் திரு. அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ஸ்ரீநம்பெருமாள் தங்க கருட சேவை புறப்பாடு நேற்றிரவு வெகு விமரிசையாக நடைபெற்றது.

-------------------------

சட்டப்பேரவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி திருநெல்வேலி மாவட்டத்தில் கடலில் படகுகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சாரம் நேற்று நடைபெற்றது.

-------------------------

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்க புதிதாக 74 ஆயிரத்து 877 பேர் மனுதாக்கல் செய்துள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

------------------------

சென்னையில் தேர்தல் பறக்கும் படையினர் நேற்று நடத்திய வாகன தணிக்கையில் சுமார் 14 லட்சம் ரூபாய் ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>> <<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் நடப்புச் சாம்பியன் பெங்களூரு அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் சென்னை, மும்பை, கொல்கத்தா, ராஜஸ்தான், பஞ்சாப் உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன.

>>>>>END<<<<<